Y.M.C.A வாசிக

★ சுகாதாரத் திணைக்களம் வடக்கே அனுப்ப மறுக்கிறது

# கர்ப்பிணிகளுக்கு இவ்வாண்டு சத்துணவு போதியளவில்லை

## அடுத்தாண்டு பிறக்கும் குழந்தைகள் நிலை பரிதாபம்?

இவ்வாண்டு (1990) கர்ப்பிணித் தாய்மாருக்கான மாத்திரைகளும், சத்துணவு வகைகளும் போதியளவு கிடைக்காததனால் அடுத்த வருடம் (1991) பிறக்கும் குழந்தைகள் நிறைகுறைவானதும், இறந்த குழந்தைகளுமாகவே பிறக்கும் நிலை உண்டாகியுள்ளதாக சுகாதார வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினதும் சுகாதார திணைக்களத்தினதும் அசமந்தப் போக்கினால் கர்பிணித்தாய்மாருக்கும், பாலூட்டும் தாய்மாருக்கான இரத்தச் சோகை போன்றநோய்கள் இவ்வாண்டினை விட அடுத்தவருடம் இரட்டிப்பாகலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு (1990) 15 — 20 வீதமான குழந்தைகள் நிறைவாகப் பிறந்துள்ளன. 1991ல் இது இரட்டிப்பாகலாம் எனவும் இதேவேளை 1989ல் தாய்சேய் இறப்பு வீதம் 1000க்கு 1. 6 வீதமாகவும் சிசுமரண வீதம் 1000க்கு 30 ஆகவும் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது

சிறுவர் பாதுகாப்பு நிதியம் இம் மருந்து வகைகள், மற்றும் திரிபோஷா, ஜீவாகாரம் போன்றவற்றை எடுத்து குறிப்பிட்ட காலத்தில் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது,

தற்போது இடம்பெறும் வானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்களால் பல கர்ப்பிணித் தாய்மாருக்கு கருச்சிதைவுகள் ஏற்பட்டு வருவதாகவும் சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (70, ப11)


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 15 பிரமோதூத கார்த்திகை 26 (12-12-1990) புதன்


## யாழ் மாவட்ட மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரை வழங்கவில்லை

யாழ் மாவட்ட மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் இதுவரை வழங்கப்படவில்லை. முன்பு கல்வி அமைச்சு மாணவர்களுக்கெனப் பாடசாலைகளில் மதிய உணவு வழங்கியது. பின்னர் பெற்றோர் உணவு கொடுக்கப் பணம் கொடுப்பதாகத் தெரிவித்து பாடசாலைகளில் மதிய உணவு நிறுத்தப்பட்டது. உணவிற்கான முத்திரைகள் வழங்கப்படுமெனவும் பெற்றோர் இவற்றை கூட்டுறவுச் சங்கங்களில் சமர்ப்பித்து உலர் உணவுப் பொருட்களைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த முத்திரைகள் யாழ் மாவட்ட மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால் வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களில் மாணவர்க்கான மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (39)

பன்குளம் சென்ற படைஅணி மீது

# மொரவேவாவில் தாக்கு

# ஐந்து படையினர் பலி

## ஏனையோர் விமானத் தளத்திற்கு தப்பி ஓட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முதலிக்குளம் (மொரவேவா) என்னும் இடத்தில் நேற்று ஸ்ரீலங்கா இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மொரவேவ இராணுவ முகாமிலிருந்து பன்குளம் முகாமுக்கு கால்நடையாக ரோந்து வந்த படையினரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகினர்.

தப்பிய சிப்பாய்கள் அருகிலிருந்த முதலிக்குளம் விமானப்படை முகாமுக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர்.

இவர்களிடமிருந்து ரி 56-2 ரக துப்பாக்கி - 2, மகசீன் - 8, ஐ. எம். ரவைகள் 270; எஸ். எல். ஆர் ரக துப்பாக்கி - 1; மகசீன் - 3; நோட்டோ ரவைகள் - 60; ரி. 81 மகசீன் - 1 ஆகியன கைப்பற்றப்பட்டன.

இரு முகாம்களுக்கும் இடையே உள்ள தூரம் 700 யார் என்பது குறிப்பிடத்தக்கது. (71)

## மன்னார்தீவில் 16 வீடுகள் இராணுவத்தால் தீக்கிரை

கடந்த ஞாயிறு இரவு மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார்தீவு கொன்னையன் குடியிருப்பு என்ற கிராமத்தினுள் புகுந்த இராணுவத்தி...

இதில் 16 பொதுமக்களின் வீடுகளை எரித்துள்ளதுடன் 2 பொதுமக்களைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இவர்களிற்கு...

கல்லடியில்

## இலங்கை வங்கி ஊழியர்

மட்டு எல்லைக் கிராமமான

## தாழையடி வெட்டையில் 2 பேர் ஊர்காவற்படையால் கொலை

அம்பாறை மாவட்டத்திலுள்ள பக்கியல்ல ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சிங்கள ஊர்காவற்படையினர் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான தாழையடிவெட்டை எனும் கிராமத்தினுள் புகுந்து சுட்டும், வெட்டியும் கொலை செய்தும் காயப்படுத்தியும் உள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடந்த இக்கொலைச் சம்பவத்தில் 2 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர். 2பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## நயினாதீவு கடற்படையினர் குறிகாட்டுவான் நோக்கி ஷெல்

குறிகட்டுவான் துறையை நோக்கி கடற்படை படகு கடந்த வெள்ளிக்கிழமை ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டது.

குறிகாட்டுவான் துறையில் நிறுத்தப்பட்டிருந்த இழுவைப் படகை நயினாதீவு கடற்படையினர் தம்மிடம் கொண்டு வரும்படி குமுதினி படகுக் காரரிடம் பணித்திருந்தனர்.

இதன் படி அந்த இழுவைப் படகு கொண்டு வரப்ப

—04 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனவரியில் கொழும்பு வருவார்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுகள் நடாத்தும் பொருட்டு இந்...

...ரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அவர் இலங்கை வெளிவிவ...

...னார் மாவட்டத்திலுள்ள மன்னார்தீவு கொன்னையன் குடியிருப்பு என்ற கிராமத்தினுள் புகுந்த இராணுவத்தினர் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

வீடுகளை எரித்துள்ளதுடன் 2 பொதுமக்களைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இவர்களிற்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. (71)

## நகரக் கமாண்டரின் உத்தரவு 'கஜபாகு'விடம் எடுபடாதாம்

வவுனியாவின் நகரப் பகுதியில் சிங்க றெஜிமென்ற் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினரும் பூந்தோட்டத்தில் கஜபாகு பிரிவினரும் தங்கியுள்ளனர் என அறியவருகிறது.

நகரக் கமாண்டரின் 'பாஸை' ஏற்க மறுக்கும் கஜபாகு பிரிவினர் கொப்பேகடுவவின் கடிதத்துக்கேயன்றி வேறு எக்கடிதத்தையோ, பாஸையோ அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறிவருகின்றனராம்

உரையாடும்போதே நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியைப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வங்கி ஊழியர் ரெலோவினால் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லடிக் கிராமத்திற்கு சென்ற ரெலோ இயக்கத்தினர் பொதுமகன் ஒருவரைச் சுட்டுக்கொன்றுள்ளது.

கடந்த ஞாயிறு இரவு 8 மணியளவில் நடந்த இக்கொலை சம்பந்தமாக கல்லடியைச் சேர்ந்த இலட்சுமிகாந்தன் (43) கொலை செய்யப்பட்டவர். இவர் இலங்கை வங்கியின் ஊழியர் என்றும் தெரியவருகிறது. (71)

## புலிகளிடம் தப்பிய கடற்படை நயினாதீவில் நேர்த்திக்கடன்

அண்மையில் புலிகளால் கலைத்து வரப்பட்ட கப்பலில் வந்த கடற்படையினர் தாம் விடுதலைப்புலிகளிடம் தப்பித்துக்கொண்டதற்காக தமது நேர்த்திக் கடனாக சென்ற ஞாயிற்றுக்கிழமை நயினாதீவில் உள்ள ஆலயங்களுக்கு வர்ணம் பூசியும் ஆலய வீதிகள் துபபுரவு

— 4 ஆம் பக்கம் பார்க்க

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுகள் நடாத்தும் பொருட்டு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. வி ஸி சுக்ளா ஜனவரி மாதத்தில் இலங்கை வரவுள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு ஹரல்ட் ஹேரத்துடன் கலந்தாலோசனை நடாத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## லங்காசிறி கப்பலில் இருந்து கடற்கொந்தளிப்பால் தபாற்பொதிகள் இறக்கவில்லை

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து லங்காசிறி கப்பலில் பருத்தித்துறைக்கு வந்த தபால் பொதிகளை யாழ் பிரதம தபாலக உத்தியோகத்தர்கள் நேற்று எடுத்துவர பருத்தித்துறை சென்று ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

கடல் கொந்தளிப்பு காரணமாக கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்படாததாலேயே தபால் பொதிகளும் இறக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது (33)

## ஓம் பிரகாஷ் சௌத்தாலா எச்சரிக்கை
## அஸாமைப் போன்றே தமிழகத்திலும் ஜனாதிபதி ஆட்சி வரலாம்

அஸாமைப்போன்று தமிழ்நாட்டிலும் தேசவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என உறுதிசெய்யப்பட்டால், அங்கு நடந்ததைப் போன்றே தமிழ்நாட்டிலும் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்படும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆளும் ஜனதாதள் (எஸ்) கட்சியின் பொதுச்செயலாளர் ஓம் பிரகாஷ் சௌத்தாலா வெளியிட்டுள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசிய சௌத்தாலா, இந்திராகாங்கிரஸ் உறுப்பினர் பொன். விஜயராகவன் மத்திய அரசிடம் சமர்பித்த தமிழக நிலை குறித்தான அறிக்கை உண்மையாகவும் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

### ஊர்காவற்றுறையில் ஷெல் தாக்குதல்

ஊர்காவற்றுறையில் உள்ள இராணுவத்தினர் அங்கிருந்து கடந்த சில தினங்களாக குடி

—04 ஆம் பக்கம் பார்க்க

## உப - சபாநாயகரின் வீடும் பொலிஸாரால் சோதனை

பாராளுமன்றஉப-சபாநாயகர் திரு காமினி பொன்சேகாவின் வீடு சோதனையிடப்பட்டது.

இவ்விடயத்தை அவர் பாராளுமன்றத்தில் பெரும் விவகாரமாக்கினார்

டி. ஐ. ஜி செனவிரத்ன தனது வீட்டைச் சோதனையிட்டு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டுள்ளார் என்று திரு. பொன்சேகா பாராளுமன்றத்தில் கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பாது காப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, இச்

—04 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பொதிகள் போவதெப்போ?

ஆசிரியர்,
முரசொலி.

யாழ்ப்பாணத்திற்கு உணவுப்பொருட்கள் ஏற்றிவரும் கப்பல்களில்தான் தற்போது தபால் பொதிகளும் கொழும்பிற்கும் ஏனைய இடங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் எந்தக்கப்பலில் எப்போது இப்பொதிகள் எடுத்துச் செல்லப்படுமென்பதை கப்பல் புறப்பட இரு தினங்களுக்கு முன்னதாக தங்கள் நாளேட்டில் அறிவித்தால் குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் உதவியாயிருக்கும்.

சு. ஸ்ரீபாஸ்கரன்,
தலைவர்
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்.

இவ்வருட உயர்தரப் பரீட்சை நடைபெறாததினால்

# 1991-92-ம் கல்வியாண்டு பல்கலை அனுமதி

# வடக்கு கிழக்கு மாணவருக்கு இல்லை

இவ்வருடத்திற்கான கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை வடக்கு கிழக்குப் பகுதியில் நடாத்தப்படாததினால் 1991 92-ம் கல்வியாண்டுக்கு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகங்களுக்கு புதிய தமிழ் மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக யாழ். பல்கலைக்கழக செனட் சபை கவலை தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற செனட்சபைக் கூட்டத்தில் இவ்விடயம்பற்றி ஆராயப்பட்டது.

வடக்கு கிழக்குப் பகுதியில் நடாத்தப்படாது விடப்பட்ட 1990-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குரிய கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமாவது இப்பகுதிகளில் நடாத்தப்படல்வேண்டும்.

அவ்வாறு நடாத்தப்படாது விட்டால் 1991-92-ம் கல்வியாண்டுக்கு மட்டக்களப்பு, யாழ். பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களை நியமிப்பதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கவேண்டி வரும் எனவும் இதனால்தமிழ் மாணவர்களின் உயர் கல்வியில் ஒரு இடைவெளி ஏற்படுவதுடன் இவ்விரு பல்கலைக்கழகங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் எனவும் செனட்சபை தெரிவித்துள்ளது. (39

---

குளுகுளுகார்கள் இனி இல்லை

## அதிகாரிகள் என்றாலும் இனி அவர்களுக்கும் ஆட்டோதான்

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து அரசாங்கப் போக்குவரத்துச் செலவினங்களைக் குறைக்கும் பொருட்டு முச்சக்கர (ஆட்டோ) வண்டிகளை திணைக்களங்களுக்கு வழங்க ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி காரியாலய அதிகாரிகளுக்கும் இத்தகைய ஆட்டோக்கள் வழங்கப்படவுள்ளன.

எரிபொருள் சிக்கன நடவடிக்கைகளின் நிமித்தம் பிரஸ்தாப ஆட்டோக்களை அரசாங்கம் இறக்குமதி செய்யவும் ஆலோசித்து வருகிறது.

அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட குளுகுளு கார்களுக்குப் பதிலாகவே இந்த ஆட்டோக்கள் வழங்கப்படவுள்ளன.

---

## நாயன்மார்கட்டு வைத்தியசாலை

30-11-90 முரசொலியிற் பிரசுரமான கட்டுரையில் சில முக்கிய செய்திகள் விடப்பட்டுள்ளதாகவும், சில தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் மனுக்கள் சில வந்துள்ளன.

அவை பற்றி விசாரணை செய்து வருகிறோம். 'தேடல்' பூர்த்தியானதும் முரசொலி ஓர் அறிக்கை வெளியிடும்.

இவ்விஷயம் தொடர்பாக மேற்கொண்டு நேர்முக சந்திப்புக்கள் வழங்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர்

---

வலிவடக்கில்
ஒய்வூதியம்
பெறுவோர் சங்கம்

வலிவடக்கில் கடந்த ஆனி மாதத்தின் பின் பலர் ஒழுங்காக மாதாந்த ஓய்வூதியம் பெறமுடியாது சிரமப்படுகின்றனர்.

இக்குறையை நீக்க ஒரு சங்கம் அமைத்து அதன்மூலம் செயற்பட வேண்டியிருப்பதால் 17-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 30 மணிக்குத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் வலிவடக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஓய்வூதியம் பெறுவோர் அனைவரையும் சமூகமளிக்குமாறு வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையத் தலைவர் கேட்டுள்ளார்.

### புகையிரதப் பகுதி ஒய்வூதியம்

இவ்வருடம் ஆடி, ஆவணி மாதங்களுக்கு உரிய புகையிரதப்பகுதி ஒய்வூதியத்தைப் பணமாக வழங்க இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவரும் தாம் வழமையாக ஒய்வூதியம் பெறும் இலங்கைவங்கிக் கிளைகளுக்குத் தத்தமது வவுச்சர்களுடன் சமுகம் தரும்படி இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் கேட்டுள்ளார்.

---

யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை.

### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991. 03. 07 ஆம் திகதி வரை என்னால் பெற்றுச்கொள்ளப்படும்.

தாவரவியல் / இரசாயனவியல் / பௌதிகவியல் / கணிதமும் புள்ளி விபரவியலும்/ விலங்கியல் - சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர்.

சம்பள அளவுத்திட்டம் :

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 ; ரூபா 9 600 - 8 250 - 11, 600 /- மாதமொன்றுக்கு
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் II : ரூபா 8,000 - 5 250 - 9, 250 /- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர்: ரூபா 3, 900 , - நிலையானது) மாதமொன்றுக்கு

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்

---

பருத்தித்துறை
தெங்கு பனம்பொருள் உற்பத்தி
விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

## பதவி விண்ணப்பம்

பொது முகாமையாளர் தரம் 115 -- 9.

புதிய கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டம்.

1105 — 60 × 4 — 75 × 11 — 2170.

தகைமைகள்:- 10-வது சம்பளத் திட்டத்தில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது 11-வது சம்பளத் திட்டத்தில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்பிரிவு) சித்தி.

அல்லது

க. பொ. த. உயர்தரம் 3 பாட சித்தியுடன், 2 வருட அனுபவம் ஆகியவற்றிற்கு குறையாத தகுதி.

வடமராட்சிப் பகுதியில் உள்ளோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை, பொது முகாமையாளர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், 330. கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 25.12.1990க்கு பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

---

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை

---

31-ம் நாள் நினைவஞ்சலி





## திருமதி சுப்பர் அன்னப்பிள்ளை

தோற்றம்: 14-03-1909 மறைவு: 12-11-1990

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும், வீரத்தாலும் நல்வழிகாட்டி எவ்வித துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா? படுக்கையில் வைத்துப்பார்க்கக் கூடாதென்றோ நொடிப் பொழுதில் உங்கள் உயிரைக் கவர்ந்தான் காலன். உங்கள் நினைவால் நாம் ஏங்கித் தவித்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அந்தியேட்டிக்கிரியைகள் 11-12-90 இலும் வீட்டுக்கிரியைகள் 12-12-90 இலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

''விஷ்ணுகோட்டம்''
கண்டிவீதி,
பளை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

12082

முகாமையாளர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், 330. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 25.12.1990க்கு பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

பருத்தித்துறை-புலோலி தெ. ப. பொ. கூ. சங்கம்,
சிவன் கோவில் வீதி,
பருத்தித்துறை.

12084

## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும் (வடக்கு, கிழக்கு) யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவரும், யாழ் மாவட்ட ''உலர்வலய அபிவிருத்திக் கழக'' இணைப்பதிகாரியும், யாழ் மாவட்ட ''சமூக நல ஒன்றிய''த்தின் இணைப்பதிகாரியுமான

### அமரர் உயர்திரு
### சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்கள் எமைவிட்டுப் பிரிந்தமையால் எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலியை, அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவுப் பாதையிலே கூட்டிவந்து எம்மை
நாட்டுயர்வு காணுமுன்னே நடுத்தெருவில் விட்டதென்ன
துடுப்பையே பிடித்தநீர் துடிக்கவே செய்திட்டீர்
ஞானப் பிரகாசமெனும் பேரறிவுச் சுடரே.

மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
பண்டத்தரிப்பு.

12.12.90.

12076

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12070

### தவறிவிட்டது

மீசாலை வடக்கு கொயிலாமனை கொடிகாமத்தைச் சேர்ந்த லலிதாதேவி சின்னத்தம்பியினுடைய 666900561V எனும் இலக்கத்தையுடைய அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் 5.12.90 அன்று பரமேஸ்வராச் சந்திக்கும், தபாற்பெட்டிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பல்கலைக் கழகத்தில் அல்லது முரசொலிக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். 12080

வங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23×10 ச.மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்

தெரிவு செய்யப்படும், அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990. 12. 10

12085

## ''சமயப்பணியோடு சமூகப்பணியும் அவசியம்''

# நாவலர் விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி

''தனது சொந்த ஆன்ம ஈடேற்றத்துக்கு உழைப்பதுடன் ஒரு சைவ சமயியின் கடமை முடிந்துவிடுவதில்லை தான் வாழுகின்ற சமூகத்துக்கும் தன்னாலான பணியை அவன் செய்ய வேண்டும் அவ்வாறு தம் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிய பரோபகாரி ஆறுமுகநாவலர்.''

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திருமுறை மடத்தில் நடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற நாவலர் குருபூசை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய மேற்படி ஆலய நிர்வாக சபைத் தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

''இப்போதுள்ளது போன்ற பஞ்சமும் பட்டினியும் 1876 இல் ஏற்பட்டபொழுது நாவலர் பெருமான் வாளா இருந்தாரல்லர். 'கஞ்சித் தொட்டித் தருமம்' என ஒன்று நடத்தினார். சீராக நிவாரணம் வழங்காத அரசாங்கத்தைத் தட்டிக்கேட்டார். அவர் எதிர்ப்புக்குரல் இங்கிலாந்துக்கும் எட்டியது.' என அம்மையார் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், கல்வி முதலிய ஏனைய தர்ம காரியங்கள் இவ்வாறே தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

விழாவில் அகதிகள் உட்பட முந்நூறுபேர் கலந்து கூட்டு வழிபாடு செய்தனர் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. தெல்லிப்பழை இந்து இளைஞர் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில், அகதிகள், அனாதைகள் உள்ளிட்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

அகதிக் குழந்தைகளுக்கென தேவஸ்தானம் ஒரு பாலர் பாடசாலையைத் தொடக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

யாழ் பல்கலைக்கழகம்,
இலங்கை.
விவசாயபீடம்
கிளிநொச்சி

### பதவி வெற்றிடம்

### அமைய தொழிலாளி

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை விவசாயபீடம் - கிளிநொச்சி ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தில் 1990.12.18-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும். இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. கல்வித் தகைமைச் சான்றிதழ்
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3. தேசிய அடையாள அட்டை
4. கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரம்

# பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளம் உடன் கிடைக்கும்

கடந்த பல வருடங்களாக வழங்கப்படாமல் இழுபறி நிலையிலிருந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளம் உடனடியாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## சவாரி போகும் உழவு இயந்திரங்கள்

# கிளிநொச்சியில் தினமும் விபத்து

கிளிநொச்சிப் பகுதியில் உழவு இயந்திரங்களில் இருந்து விழுந்து காயமடைவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இப்பகுதியில் தற்பொழுது வயல்களில் களைபிடுங்கும் வேலைகள் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

இதற்காக தொழிலாளர்கள் இரணைமடுப் பகுதியில் இருந்து வயல்களுக்கு உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்படுவது வழமை.

உழவு இயந்திர இழுவைப் பெட்டிகளில் மிகவும் கூடுதலான தொழிலாளர்களை ஏற்றிவிட்டு போட்டி போட்டுக் கொண்டு அவற்றை வேகமாகச் செலுத்துவதனால் இழுவைப் பெட்டியின் கதவுப் பகுதியில் இருப்போர் கீழே விழுந்து படுகாயமடையும் சம்பவங்கள் தினமும் இடம்பெற்று வருகின்றன.

(35)

# கடினமான கணித வினா விசாரணைக்கு உத்தரவு

க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் கணித பாடம் மிகக் கடினமானதாக இருந்தது என பல புகார்கள் செய்து கொள்ளப்பட்டதையடுத்து பரீட்சைத் திணைக்களம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் நடத்தப்பட்ட இப்பரீட்சை வினாப் பத்திரம் விடையெழுத இயலாதவாறு மிகக் கடினமானதாக இருந்ததாகக் கிடைத்த புகார்களின் பேரில் நாடளாவிய ரீதியில் விசாரணை நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டு நிரூபணமாகும் பட்சத்தில் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் விடைப்பத்திரங்கள் திருத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# ஸார்ஜா கிண்ண கிரிக்கட் 25-ம் திகதி நடைபெறும்

இம் மாதம் 25-ம் திகதி ... தமது அணிகளை இப்போட்டி

# பலாலி தளமான கதை [2]

அவரைப் பலாத்காரமாக அகற்ற அரசு விரும்பவில்லை. ஏனைய காணிகள் சுத்திகரிக்கப்பட்டன. காலப்போக்கில் திரு. கதிரிப்பிள்ளை தாமாகவே காணியை விட்டு வெளியேறினார். விமானத்தளத்திற்கான காணிகள் விரைவாகத் திருத்தப்பட்டன. இதற்காக ஆரம்பத்தில் ஓடு பாதைக்கு (ruoway) மட்டும் ஏழு கிணறுகளும் அவற்றுக்கான தோட்டங்களும், குடிமனைகளும் நட்டஈட்டு அடிப்படையில் அகற்றப்பட்டன.

### கேரளத்திலிருந்து தொழிலாளர்

தளம் அமைக்க உடனடியாக ஐயாயிரம் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். உள்ளூரில் இவ்வளவு பெருந்தொகையான தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. இந்திய கேரள மாநிலத்தைச் சேர்ந்த கொச்சி மாவட்டத்தில் இருந்து 800 தொழிலாளர்கள் 1942-ஆம் ஆண்டு மாசி மாதம் 16-ஆம் திகதி கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டனர். அவர்களைக் காங்கேசன் துறைமுகத்தில் கப்பல் கொண்டு வந்து இறக்கியது. தொழிலாளர்கள் நடைபாதை வழியாக பலாலிக்குக் கொண்டு வரப்பட்டனர் இத்தொழிலாளர்கள் பாறாங்கற்களைப் பெயர்க்கும் தொழிலில் ஈடுபடுத்தபபட்டனர்.

வெளிநாடு ஒன்றிலிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டமை சுதேசித் தமிழ் மக்களுக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்தியது. எனினும் பிரித்தானிய அரசின் ஆதிக்கத்துக்கு தமது எதிர்ப்பைக் காட்ட முடியாது மக்கள் தமது மனத்துக்குள் புழுங்கினர்; 'வெள்ளைக்கார ஆட்சி'யையே மனதார வெறுத்தனர். இவ்வெறுப்புணர்ச்சி 'கொச்சியார்' மீதும் திரும்பியது. கொச்சியாரை எதிர்க்க சுதேசிகள் துணிந்தார்கள்.

### மொண்டிகள்

பலாலி, வசாவிளான், வளலாய்ப் பகுதிகளில் கொச்சியார் வேலைக்கமர்த்தப்பட்டனர். இவர்கள் கல்லுக் கிளறும் இடங்கள் 'மொண்டி' என அழைக்கப்பட்டது. பலாலி தெற்கு தெழுந்தை மொண்டி, வயாவிளானிலுள்ள போயிட்டி மொண்டி (தற்போதைய சுந்தரபுரம்) குப்பிளான் மொண்டி வளலாய் மொண்டி, நிலாவரை மொண்டி என்பவற்றில் பலாலி ஓடுபாதைக்குரிய கற்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

மாரிகாலத்தில் தெல்லிப்பளைக்குப் பயணம் செய்பவர்கள் குரும்பசிட்டியைச் சுற்றிச் செல்ல நேர்ந்தது. விமான ஓடுபாதைக்குத் திட்டமிடப்பட்ட தென்பகுதி மாரியில் இயல்பாகவே குளமாகுவது வழக்கம். சிலர் வாழைக்குற்றிகளைப் பிணைத்துக்கட்டியும், ஆமையோடுகளையும் தெப்பமாகப் பாவித்து கட்டுவன்வரை சென்றனர். இப்பகுதிகள் பின்பு மொண்டிகளில் எஞ்சும் கல்லும் மண்ணும் கொண்டும் நிரப்பப்பட்டன.

### சுதேசிகள் வியாபாரம்

கொச்சியாளருக்கு சுதேசிகள் திட்டமிட்டு தமது பொருட்களைக் கூடிய விலைக்கு விற்றார்கள். அக்காலத்தில் ஒரு பணம் என்று கூறப்பட்ட ஆறுசதத்திற்கு பெறப்பட்ட ஒரு றாத்தல் 'சூடை' வகை மீன்கள் பொரித்தெடுக்கப்பட்டு ஒரு மீன் பத்துச்சதமாக அவர்களுக்கு விற்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு அவர்களது வேலைத் தளங்களில் வைத்து தேநீர் மதியவுணவு என்பன எடுத்துச் சென்று வழங்கப்பட்டன. குடிநீர் வளலாய் பிள்ளையார் கோவிலில் இருந்து எடுக்கப்பட்டு 'பவு

வைத்தியசாலை, தோட்டங்கள், வீடுகள், ஓடுபாதைகளுக்குள்ளிருந்த ஏனைய கிணறுகள் அழிக்கப்பட்டாலும் எல்லைப்பகுதிகளில் இருந்த இந்துக் கோவில்கள் பாதுகாக்கப்பட்டன. அமையவிருக்கும் விமானப் படைக்குரிய வைத்தியசாலையும் சமகாலத்தில் காங்கேசன் துறையில் அமைக்கப்பட்டது சுமார் ஐம்பது ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கப்பட்டது. இதுவே றோயல் விமானப்படை வைத்தியசாலை(Royal Air Force Hcspital) இது தற்போது பழைய ஆஸ்பத்திரி என அழைக்கப்படுகின்றது.

### சுதேசிகள் - கொச்சியார் மோதல்

விமான நிலைய வேலைக்கெனக் கொண்டு வரப்பட்ட கொச்சியாருக்கும், சுதேசிகளுக்குமிடையில் வளர்ந்து வந்த பகைமையுணர்வு பெண் விவகாரமொன்றினால் கலகமாக வெடித்தது. கிராமத்துக்குள் வந்த கொச்சியார் சுதேசிகளால் தாக்கப்பட்டனர். பிடித்துக் கட்டிவைக்கப்பட்டனர் கட்டிவைக்கப்பட்டவர்களை மீட்கக் கொச்சியார் பலாலி, வயாவிளான் கிராமங்களின் மீது தாக்கத் திட்டமிட்டனர் கத்திகள், கோடரிகள், மண்வெட்டிப்பிடிகள், அலவாங்குகள், தீப்பந்தங்கள் ஆயுதங்களாகத் தயாராயின. திடீரெனச் சத்தமிட்டவாறு கொச்சியார் வயாவிளான் சந்திப் பகுதிக் கிராமங்கள் மீது

**க. இராசதுரை**

1943 புரட்டாதி மூன்றாம் திகதி பிற்பகல் தாக்குதலைத் தொடுத்தனர். பலர் தாக்கப்பட்டனர். அதிக வீடுகள் எரிக்கப்பட்டன. கந்தன் முத்தன் என்ற தமிழ் சுதேசி கொச்சியாரால் அடித்துக் கொல்லப்பட்டார். பலாலி விமானத் தளத்தின் தோற்றத்தோடு தொடங்கிய தமிழர் கொலை இன்றுவரை தொடர்கிறது! தோலகட்டி ஆச்சிரம பாதிரியார் அருட்திரு தோமஸ் அடிகளின் தலையீட்டால் சண்டை நிறுத்தப்பட்டது. எனினும் தமிழ் சுதேசிகளின் மீதான தாக்குதல், வீடெரிப்பு முதலியவற்றுக்கு இதுவே முதற் சம்பவமாக அமைந்து இன்றும் தொடர்கின்றது.

### விமான விபத்து

ஓடுபாதை வேலை முற்றுப் பெற்று விமானத்தளம் இயங்கத் தொடங்கியது இப்பாதையில் விமானங்கள் இறங்கி ஏறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஸ்கை மாஸ்டர் (Sky master) என்னும் நான்கு யந்திர விமானம் இயந்திரக் கோளாறு ஒன்றினால் குரும்பசிட்டிப் பகுதியில் விழுந்து சிதறி எரிந்தது ஐம்பதுக்கும் மேற்பட்ட பனை மரங்கள் ஒரே தடவையில் முறிந்தன. விமானத்தில் இருந்த பத்துப் பேர் கருகி இறந்தனர். இச்சம்பவம் இப் பகுதியில் நடைபெற்ற ஒரு 'துர்க்குறி என மக்கள் கருதினர்.

### இரைச்சலும் இடப்பெயர்ச்சியும்

விமானங்களின் பேரிரைச்சல் மக்களைப் பயங்கொள்ள வைத்தது. வாழ்க்கையிலே கேட்டிராத இச்சத்தத்தால் மக்கள் பீதி கொண்டனர் சிலருக்கு மனநோய் கூடப் பிடித்ததாக அப்பகுதி மக்கள் கூறுவர். நான்கு இயந்திர விமான விபத்தையடுத்து பலாலிய குரும்பசிட்டி, கட்டுவன், மயிலிட்டி, வளலாய் பகுதி மக்கள் இடம் பெயர்ந்தனர். தோட்ட

4. கிராம சேவையாள
ரின் நற்சாட்சிப்
பத்திரம்

கல்வித் தகைமை:
7-ம் வகுப்பில் சித்தி
வயது: 18 வயதிற்குக் குறையாமலும் 40இற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

சம்பளத் திட்டம்:
நாளொன்றுக்கு ரூபா 55/- உம், படிகளும்

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
1990 . 12 . 11

12087

## 25-ம் திகதி நடைபெறும்

இம் மாதம் 25-ம் திகதி ஸார்ஜாவில் நடைபெறவுள்ள ஸார்ஜா கிண்ண, ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் போட்டியில் கடந்த வருடம் இப்போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட பாகிஸ்தான் அணியும், இலங்கை அணியும் மாத்திரமே கலந்து கொள்ளவுள்ளன.

வளைகுடாவில் தற்பொழுது நிலவும் போர் சூழ்நிலையைக்காரணம் காட்டி இந்தியா, அவுஸ்திரேலியா, மேற்கு இந்தியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, சிம்பாவ்வே ஆகிய நாடுகள் தமது அணிகளை இப்போட்டியில் கலந்துகொள்ள அனுப்ப மறுப்புத்தெரிவித்துள்ளன.

எனவே இப்போட்டி இம்முறை முன்னைய போட்டிகள் போல் சோபிக்காது என அவதானிகள் கருதுகிறார்கள்

---

## டாக்டர் நியமனம்

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு தொண்டர் டாக்டராக கே. மயிலேறும் பெருமாள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் இவ்வைத்தியசாலையில் வைத்தியப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவராவர். (50)

DIPLOMA IN NURSING

புதிய பிரிவுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

★ துரித பயிற்சி நெறி ★ செய்முறைப் பயிற்சியுடன் கூடியது
★ பிரபல விரிவுரையாளர் குழு

விபரங்கட்கு:
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, ST. PETER'S LANE, HOSPITAL ROAD,
JAFFNA.

12086

தேநீர் மதியவுணவு என்பன எடுத்துச் சென்று வழங்கப்பட்டன. குடிநீர் வளலாய் பிள்ளையார் கோவிலில் இருந்து எடுக்கப்பட்டு 'பவுசர்'கள் மூலம் விநியோகிக்கப்பட்டது உள்ளூர்த் தொழிலாளர்கள் இரண்டு மொண்டிகளில் தமது பெயரைப் பதிந்து ஓரிடத்தில் மட்டும் வேலை செய்து இரண்டுக்கு மேற்பட்ட சம்பளம் பெற்றுக்கொண்ட சம்பவங்களும், வேலைகளில் பரிச்சயமற்றவர்களும் வேலைக்குச் சென்று 'சமாளித்த' சம்பவங்களும் இடம்பெற்றன.

### பலமான ஓடுபாதை

தொழிலாளர்களைக் கொண்டு 8 600 அடி நீளமான ஓடுபாதை அமைக்கப்பட்டது. இலங்கையில் அமைக்கப்பட்ட பதினைந்து விமானத்தளங்களில் பலமான ஓடுபாதையாக பலாலி விமானத்தளமே இன்றும் கருதப்படுகின்றது கட்டுநாயக்கா விமானத்தளம் கூட செயற்கையாக நிலத்துக்கடியில் 6 அடி 'கொங்கிறீற்' போடப்பட்டு பலமானதாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சர்வதேச விமானத் தளமொன்றிற்கு பதினேசு ராயிரம் அடி நீளமான ஓடுபாதை தேவையாகும்.

### கட்டிடங்கள் எழுந்தன

பலாலி விமானத்தளத்தில் கட்டிடங்கள் அமைக்கும் பணியும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது இக்கட்டிடங்களின் மேற்பார்வையாளராக கடமை புரிந்த றண்யாட் (Runyard) என்பவரது பெயர் பலாலியில் உள்ள மதகொன்றில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

அப்போது அரசாங்க சபையில் கட்டிட நிர்மாணப் போக்குவரத்து அமைச்சராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல இவ்வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தார்.

இயந்திர விமான விபத்தையடுத்து பலாலிய குரும்பசிட்டி, கட்டுவன். மயிலிட்டி. வளலாய் பகுதி மக்கள் இடம் பெயர்ந்தனர். தோட்ட நிலங்கள் வெறுமனே விடப்பட்டன. பங்கரச் சத்தம் கேட்காத இடத்துக்கு மக்கள் ஓடினர் எப்போதாவது தங்களின் தலையின் மேல் விமானம் விழுந்து விடுமோ என்ற பீதி அவர்களுக்கு ஏற்பட்டது. என்றுமே இப்பகுதியை விட்டு இடம்பெயராத மக்கள் இன்று 'ஷெல்' வீச்சுக்குப் பயந்து ஓடுவது போல் அன்றும் ஓடினர். மக்கள் இடம் பெயர்வதால அப்பகுதிகள் சூனியப் பிரதேசமாகியது.

### ஆகாய விமானத்தால் ஆபத்தில்லை

மக்களுக்கு விளக்கமளிக்கும் பொறுப்பும்-மீளக்குடியமர்த்தும் பொறுப்பும் கிராமத் தலைமைக்காரர் திரு அம்பலவாணர் (விதானை) இடம் கொடுக்கப்பட்டது. ஊரெங்கும் 'பறை' ஒலிக்கப்பட்டது. விமானம் ஆபத்தற்றதென்று விளக்கப்பட்டது. மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். அதற்கான ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன. விமானப் பேரொலிக்கு மக்கள் பழகலாயினர். நாளடைவில் மக்கள் திரும்பவும் அவ் இடங்களுக்கு வந்து சேர்ந்தனர். இவ் விமானத்தளம் மக்களை இடம்பெயரச் செய்வதில் பிள்ளையார் சுழி' (உ) ஆனது.

### மிஞ்சிய உணவும் வெற்றுப் பேணிகளும்

படையினரதும் ஊழியர்களதும் உணவின் எச்சசொச்சங்கள் குவிந்தன. இவை பன்றிகளுக்கு உணவாகின. பன்றிகள் பெருகின தோலகட்டி ஆச்சிரமத்துக்கும் பன்றிகள் வழங்கப்பட்டன. உணவின் மீதிகளும்-கழிவுகளும் அங்கும் அனுப்பப்பட்டன

(வளரும்)

# வெள்ள அகதிகளுக்கு வெளிநாடுகள் வழங்கிய உணவுப்பொருள்கள் பழுதடைந்து துர்நாற்றம்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வெளிநாடுகள் அன்பளிப்பாக வழங்கிய பெறுமதியான நிவாரணப்பொருட்கள் உரியகாலத்தில் மக்களுக்கு விநியோகிக்கப்படாததால் களஞ்சியத்தில் பழுதடைந்து விட்டன. இவற்றை அழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெள்ள அகதிகளுக்கென ஸ்ரீலங்கா அரசு வெளிநாடுகளிடமிருந்து பெற்ற 22 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க நிவாரணப் பொருட்கள் எவருக்கும் பயனற்று, நாற்றமெடுப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளிடமிருந்து அரசு அரிசி, பருப்பு, சீனி, ரின் மீன், ரின்னில் அடைக்கப்பட்ட மாட்டிறைச்சி முதலான பொருட்களை 1989-ம் வருடத்தில் பெற்றது.

இப்பொருட்களைக் கொழும்பு, காலி, கம்பளை, களுத்துறைப் பகுதி மக்களுக்கான வெள்ள நிவாரணமென வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுக் கொலன்னாவ ப. நோ. கூ. சங்கக் களஞ்சியத்தில் வைத்திருந்தது.

ஆயினும் இப்பொருட்கள் உரியகாலத்துக்குள் விநியோகிக்கப்படாமையால் பழுதடைந்து துர்நெடி கிளப்பின. அவற்றை நிர்மூலமாக்குவதனைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலை உருவாகிவிட்டது.

## 4 வாரங்களுக்கான விசேட உணவு விநியோகத்தை இம்மாத இறுதிக்குள் வழங்க நடவடிக்கை

நான்கு வாரங்களுக்கான விசேட இலவச உலர் உணவும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கு யாழ் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இங்கு வந்துள்ள உணவுப்பொருட்களுடன் அடுத்த வாரம் வரவிருக்கும் குமணக்கப்பலில் வரும் உணவுப் பொருட்களும் இவ்விநியோகத்திற்கு பயன் படுத்தப்படும்.

இதனைத் தொடர்ந்து 5 ஆவது கட்ட விநியோகம் ஆரம்பிக்கப்படும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த ஜூன் மாதத்திலிருந்து 26 வாரங்களுக்கு நடைபெற வேண்டிய விநியோகம் இதுவரை ஐந்து வாரங்கள் மட்டுமே நடைபெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

ப. நோ. கூ. சங்கங்கள்

## பாவனைக்குதவாத மாவை விநியோகிக்கக் கூடாதென உத்தரவு

பழுதடைந்து பாவனைக்குதவாத நிலையிலுள்ள மாவை மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டாம் என யாழ் மாவட்ட உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி பல நோ. கூ. சங்கங்களைக் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்க கிளை இல. 26-ல் விநியோகம் செய்யப்பட்ட பாவனைக்குதவாத மா பற்றி அரசாங்க அதிபருக்குக்கிடைக்கப்பெற்ற புகாரையடுத்து அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக கப்பலில் இருந்து மா இறக்கப்படும் போது கடல் நீரில் மா மூடைகள் நனையும் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறான மாவை மக்களுக்கு விநியோகம் செய்யாமல் வைத்திருக்குமாறும் அதற்குப் பதிலாக வேறு மாவை வழங்குதான் நடவடிக்கை எடுப்பதாகவும் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கின்றார். (66)

அரசாங்க அதிபர் நடவடிக்கை

## நவம்பர் மாத ஆசிரியர் சம்பளம் பணமாக வழங்கப்படும்

யாழ் மாவட்ட கல்வித்திணைக்களத்திற்கு நவம்பர் மாத ஆசிரியர் சம்பளம் வழங்க 3 கோடியே 35 லட்சம் ரூபா கிடைக்கும்.

யாழ் அரசாங்க அதிபர் நேற்று கொழும்புடன் தொடர்பு கொண்டு இதுசம்பந்தமான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ் செயலகத்திற்குத் ... பலில் மக்கள் வங்கிக்குத் தேவையான பணம் வந்து சேர்ந்ததும் கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் நடைபெறும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்கள் இதற்காக வீணாகச் செயலகத் ...

வன்செயல் மரணக் கொடுப்பனவு

## 450 க்கு மேற்பட்ட விண்ணப்பம் 361 பேருக்குப் பணம் கிடைத்தது

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஜூன் மாதத்தின் பின் இறந்தவர்களில் 361 பேருக்கான மரணச் செலவுகள் வழங்கப்பட்டுள்ளன.

தலா 2000 ரூபா வீதம் வழங்கப்படும் இம்மரணச் செலவுகளுக்காக இதுவரை 450 க்கு மேற்பட்டோர்களது விண்ணப்பங்கள் யாழ் செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. (66)

இலங்கை வங்கியின்

## ஒய்வூதிய கொடுப்பனவுக்கு இரண்டரை கோடி ரூபா வந்தது

லங்கா சிறி கப்பல் மூலம் இலங்கை வங்கிக்கு இரண்டரைக் கோடி ரூபா பணம் வந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறையை வந்தடைந்த இக்கப்பலில் 1000 தொன் அரிசி, 1000 தொன் மா, 377 தொன் சீனி உட்பட 2700 தொன் உணவுப் பொருட்களும், 271 தபால் பொதிகளும், 100 பரல் மண்ணெண்ணெய் ஆகியனவும் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ் மாவட்ட இலங்கை வங்கிக்கிளைகள் அனைத்துக்கும் இப்பணம் பங்கிட்டு வழங்கப்பட்டு ஒய்வூதிய கொடுப்பனவுகளுக்குப் பயன் படுத்தப் படவுள்ளதாக இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (66, 74)

கருணாநிதி கருத்து

## பொலிஸ், இராணுவத்தால் மட்டும் அமைதி உருவாகாது

பொலிஸாராலோ, இராணுவத்தினராலோ மாத்திரம் அமைதியையும், நல்லிணக்கச் சூழ் நிலையையும் சமூகத்தில் கொண்டு வருவது சாத்தியமில்லை. மனத்தூய்மையுடன் செயற்பட்டால் மக்களால் ... மு. கருணாநிதி கூறியுள்ளார்.

மதுரையில் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே கலைஞர் மேற்கண்டவாறு சொன்னார்.

"வன்முறைகளுக்கு முற் ...

நோயாளருக்கான

## பொதுசன உதவிப் பணம் அடுத்தவாரம் முதல் வழங்கப்படும்

காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களுக்குவழங்கப்படும் பொதுசன உதவிப் பணம், பணமாக அடுத்த வாரம் வழங்கப்படும் என யாழ் அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் புற்றுநோயினால் 300பேரும் காசநோயினால் 300 பேரும், தொழுநோயினால் 603 ரும் பாதிப்படைந்தமைக்காக இந்த உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

இதேவேளை சமூகசேவைத் திணைக்களம் இங்கு 15853 பேருக்கு தர்மப்பணத்தையும் வழங்கிவருகின்றது. (66

வவுனியாச் சம்பவங்களால்

## மடுப்பாதை வழியாக வியாபாரிகள் பயணம்

வவுனியாவில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்தும்யாழ்ப்பாணப்பகுதி வியாபாரிகள் மடுப்பாதை வழியாக இங்கு பொருட்களை தொடர்ந்தும் கொண்டுவருவதைக்காண முடிகிறது.

கடந்த சில தினங்களாக ஊரடங்கு அமுலில் இருந்ததால் தடைப்பட்டிருந்த வியாபாரிகளின் போக்குவரத்து சேவைகள் மீண்டும் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

கல்வியங்காடு, திருநெல்வேலி, சுன்னாகம், சாவகச்சேரி சந்தைகளில் பெருமளவு தென்பகுதி பொருள்கள் காணப்படுகின்றன. (33, 71)

## மாங்குளம் அரச அலுவலகங்களில் குரங்குகள் அட்டகாசம்

மாங்குளத்திலுள்ள அரச கட்டிடங்கள், விடுதிகளை. குரங்குகள் தமது இருப்பிடங்களுக்கு மாற்றி வருகின்றன.

நீண்டகாலமாக மூடப்பட்டுக் கிடக்கும் பல திணைக்களங்கள், விடுதிகளை குரங்குகள் அசிங்கப்படுத்துவதோடு ஓடுகளை உடைத்து உட்சென்று அசிங்கப்படுத்தியுள்ளன. இதனால் அக் கட்டிடத்தில் துர்நாற்றம் வீசுகிறது.

மேலும் அங்குள்ள ஆவணங்களையும் அவை நாசப்படுத்தியிருப்பதாகவும் தெரிய வருகிறது. (38)

## வெளிநாட்டவரைக்கண்டதும் யாழ் பயணிகள் போக அனுமதி

கொழும்பு சென்று யாழ் குடாநாடு திரும்பிய பல திணைக்கள உயர் அதிகாரிகளும். பிரயாணிகளும், வவுனியா இராணுவ தடை முகாமில் நேற்று முன்தினம் நீண்ட நேரம் தடுத்துவைக்கப்பட்டனர்.

இதனால் இவர்கள் தங்களுக்கு என்ன நடக்குமோ என ஏங்கிக் கொண்டிருந்ததாகவும் அந்த நேரத்தில் வெளிநாட்டு பிரஜை ஒருவரின் வாகனம் ஒன்று வந்ததாகவும், அந்த வாகனத்தைக் கண்ட இராணுவத்தினர் தடுத்து வைத்தவர்களை உடன் போகும்படி சொன்னதும் இதனையடுத்தே தாம் பிரயாணத்தை மேற்கொண்டதாகவும் தெரிவித்தனர்.

அந்த வெளிநாட்டுப் பிரஜையின் வாகனம் வராது விட்டால் தங்கள் உயிருக்கு ஏதும் நடந்திருக்குமோ என அந்தப் பிரயாணிகள் தெரிவித்தனர். (33

## பொருட்களை களஞ்சியப்படுத்த லொறிகளுக்கு டீசல் இல்லை!

கப்பலில் கொண்டுவரப் பட்டுள்ள பொருட்களை ... டீசல் வழங்கப்படவில்லை என கூட்டுறவுச் சங்க வட் ...

நேற்று கொழும்புடன் தொடர்பு கொண்டு இதுசம் பந்தமான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ் செயலகத்திற்குத் தேவையான கட்டு நிதியை அனுப்பிவைப்பதாகவும் அத்தியாவசிய சேவைகள் வட பகுதி மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா அரச அதிபருக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்த கப்

லக வட்டாரங்கள் தெரிவித் தன.

இவ் வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்கள் இதற்காக வீணாகச் செயலகத்திற்கு அலைந்துதிரிய வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார். (66)

சூழ் நிலையையும் சமூகத்தில் கொண்டு வருவது சாத்தியமில்லை. மனத்தூய்மையுடன் செயற்பட்டால் மக்களால் இச் சூழ்நிலையைத் தோற்றுவிக்க முடியும்'' என்று தமிழக முதலமைச்சர் கலைஞர்

யாளர்களிடம் பேசுகையிலேயே கலைஞர் மேற்கண்டவாறு சொன்னார்.

''வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசியல் பாகுபாடு ஏதுமின்றி யாவரும் திறந்த மனதுடன் ஒருமித்துப் பாடுபட முன்வர வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# லொறிகளுக்கு டீசல் இல்லை!

கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள பொருட்களை பருத்தித்துறையில் இருந்து ஏனைய களஞ்சியங்களுக்குக் கொண்டு செல்ல பல. நோ. கூ. சங்க லொறிகளுக்கு கடந்த மூன்று நாட்களாக டீசல் வழங்கப்படவில்லை என கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களுக்கென கொழும்பிலிருந்து பிரத்தியேகமாக கப்பலில் டீசல் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இதனை வழங்குபவர்களின் அசிரத்தையால் கூட்டுறவுச் சங்கங்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

# அகதி மாணவர்களுக்கு தற்காலிக பாடசாலை

வேலணை சாட்டி மாதா கோவிலில் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்து தங்கியுள்ள சிறுவர்களுக்குத் தற்காலிக பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் கல்வி கற்று வந்து தற்பொழுது அக் கல்வியைத் தொடர முடியாது இங்கு தங்கியுள்ள பிள்ளைகளின் வசதி கருதி பங்குத் தந்தை வணபிதா எஸ். எவ். கிருபாணந்தன் அடிகளாரின் முயற்சியின் பயனாகவே தற்காலிக பாடசாலை ஒன்று நடாத்தப்படுகின்றது (19)

# கிறிஸ்தவ பாடசாலையில் கிறிஸ்தவ ஆசிரியர் இல்லை

எழுவைதீவில் உள்ள றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கிறிஸ்தவ பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் எவரும் கடந்த ஐந்து வருடங்களாக நியமிக்கப்படவில்லை.

முற்றிலும் கிறிஸ்தவ மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலையில் வெளியிடத்தைச் சேர்ந்த இரண்டு இந்து சமய ஆசிரியர்கள் கல்வியைப் போதித்து வருகின்றனர். (19)

## புலிகளிடம்...

செய்தும், மக்களுக்கு ரொபிகள் வழங்கியும் உள்ளனர்.

இவர்கள் நயினாதீவில் உள்ள பள்ளிவாசல், அந்தோனியார் ஆலயம், நாகபூஷணி கல்யாண மண்டபம், நாகபூஷணி அம்மன் கோயில் வீதி துப்புரவு செய்யும் வேலைகள் ஆகியவற்றை மேற்கொண்டனர்.

நயினாதீவுக் கடலில் வந்த கடற்படையினரின் கப்பல் அண்மையில் புலிகளால் துரத்திவரப்பட்டபோது நயினாதீவுப் பகுதி கடலில் உள்ள கற்பாறையில் மோதுண்டு கப்பல் நீரில் மூழ்கியதும் குறிப்பிடத்தக்கது.(33

## உப-சபாநாயகரின்...

சோதனை பொலிஸ் தலைமைப் பிரிவினால் நடத்தப்பட்டது என்றார்.

தன் நிலைப்பாட்டை டி.ஐ.ஜி .செனவிரத்ன நேரடியாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாதாகையால் அவர் பொலிஸ்மா அதிபருக்குத்; தன் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார் என்றும் விஜயரத்ன மேலும் கூறினார்.

## நயினாதீவு...

டாத காரணத்தாலேயே இவ்வாறு ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன. (20)

## தாழையடி...

த. அருள் (12) பக்கியல்ல; த. தருமன் (19) 35ம் கிராமம், ஆகியோரே கொல்லப்பட்டவர்கள்.

சாமித்தம்பி (50) 37ம் கிராமம், செ. சின்னவன்(18 35ம் கிராம் ஆகியோர் காயமடைந்துள்ளனர். (71)

## நகரக்..

பிடிக்க பக்கத்தில் நிற்பவர் பற்களைக் கடித்தபடி பளபளக்கும் கத்தியை ஏந்திய வண்ணம் நிற்பதாகவும் வவுனியாவிலிருந்து வந்த அரச உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (23)

## ஊர்காவற்றுறையில்'.

யிருப்புப் பகுதிகளை நோக்கி அடிக்கடி ஷெல் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

வெடிச்சத்தங்களும் கேட்டவண்ணமிருக்கின்றன. (33)

## வடமராட்சி ஆசிரியருக்கு அழைப்பு

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறுவதற்கு விண்ணப்பித்த சகல அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் 12 ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் தவறாது சமூகமளிக்கும்படி வடமராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரி பொ. வீரபத்திரன் கேட்டுள்ளார். (70, 74)

## விசர் நாய்க் கடி மருந்து வந்தது

பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள 'லங்காசிறி 'கப்பலில் 25 பீப்பாய் குளோரின்பவுடர் வந்துள்ளது.

அத்துடன் விசர்நாய்க்கடி மருந்து 4800 மில்லி லீட்டரும் இக்கப்பலில் வந்துள்ளது.

## கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம்

கிராமிய வங்கிகளில் இருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவ் வங்கிகளில் வைத்தே பணமாக ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (66)

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 12-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.